## நிகழ்யுக தலைவரின் 'திராவிட மாடல்' ஆட்சியால் தமிழ்நாடு தலை நிமிர்ந்துள்ளது!

# தமிழ்நாடு - நாட்டிலேயே முதன்மை சுற்றுலாத்தலமாக விளங்குகிறது!

## சட்டப்பேரவையில் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்து அமைச்சர் கா.ராமச்சந்திரன் பெருமிதம்

**சென்னை, ஏப்.22 -**

**நிகழ்யுக தலைவரின் திராவிட மாடல் ஆட்சியால் தமிழ்நாடு தலை நிமிர்ந்துள்ளது என்றும், தமிழ்நாடு - நாட்டிலேயே முதன்மை சுற்றுலாத் தலமாக விளங்குகிறது என்றும் சட்டப் பேரவையில் சுற்றுலா துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளிக் கையில் சுற்றலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டார்.**

சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் கா.இராமச்சந்திரன் அளித்த பதிலுரை வருமாறு:-

வைக்கம் வீரர், திராவிட இயக்க முன்னோடி, ஒடுக்கப்பட்டு, தடுக்கப்பட்டு, நடுக்கம் கொண்டிருந்த நலிந்தோரை நெஞ்சு நிமிர வைத்த வைக்கம் போராட்டத்தின் சரித்திரச் சான்றோன் தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன். திராவிட முன்னேற்ற கழகத்தின் சீர்மிகு சிற்பி, மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும் என்று முத்திரை கருத்தை முழங்கியவர், "கடமை கண்ணியம் கட்டுப்பாடு" என்ற முப்பெரும் முனைப்புகளை ஒற்றைத் தாரக மந்திரமாக கற்றுத் தந்தவரான பேரறிஞர் அண்ணாவை வணங்குகிறேன். "அண்ணா வழியில் அயராது உழைப்போம்" என மூச்சு முட்ட உழைத்த முத்தமிழ் வித்தகரின் முனைப்புகள், திராவிடப் பூங்காவிற்கு உரமாகவும், தரமிகு திறனாகவும் உள்ளன. அத்தகைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஓய்வெடுக்கும் இடம் நோக்கி வணங்குகிறேன்.

அறிவாற்றல் மிகு சாதனையாளர், இனமான பேராசான், தன்மானச் சிங்கம், நிலைமாறா நெறியாளர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முதுபெரும் தோழர், பேராசிரியர் பெருந்தகை அவர்களை வணங்குகிறேன். முத்தமிழறிஞர் கலைஞரின் மனசாட்சி, தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு வித்திட்டவர், முரசொலி நாளிதழின் உழைப்பு அவரை முரசொலி மாறன் என்றே வடிவமைத்தது அத்தகு கொள்கை குன்றான முரசொலி மாறன் அவர்களை வணங்குகிறேன்.

"உழைப்பு, உழைப்பு, உழைப்பு, அதுதான் தளபதியாரின் தனிப்பெரும் சிறப்பு" என்று முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் போற்றப் பெற்றவர் உலக தமிழ் மக்களின் பாதுகாவலர், திராவிட மாடலை வளர்த்தெடுத்த சீலர், சமூகநீதி, சமத்துவம், சமதர்மம் ஆகிய முப்பெரும் தாரக மந்திரங்களின் ஒப்பற்ற தலைவர் தளபதியார், வைக்கம் போரட்டத்தில் தந்தை பெரியார் போராடினார். அதன் நூற்றாண்டு விழா நிகழ்ச்சியில் பங்கேற்று தளபதியார் திராவிட இனத்திற்கே பெருமை சேர்த்தார்.

நிகழ் யுக தமிழின தலைவராக நெஞ்சு நிமிர்த்தியவர்: திராவிட மாடலை வடிவெடுத்து, தமிழ்நாட்டு மக்களை தலை நிமிர வைக்கும் முதலமைச்சர் அவர்களை வணங்குகின்றேன்.

இளைஞர்களின் எழுச்சி நாயகர்; கழக இளைஞரணி செயலாளர்; தமிழ்நாட்டு மக்களின் இல்லத்து செல்லப் பிள்ளை; விளையாட்டு வீரர்களுடன் களமாடும் செயல்சிட்டு சீர்மைமிகு சின்னவர்; பார்புகழும் மன்னவர்; இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், சிறப்புமிகு சின்னவரை வணங்குகிறேன்.

அவை முன்னவர் அவர்களையும், பேரவைத் தலைவர் அவர்களையும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், அரசு தலைமை கொறடா அவர்களையும், அமைச்சர் பெருமக்களையும், அனைத்து கூட்டணி கட்சிகளின் சட்டமன்ற குழுத் தலைவர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரையும் வணங்கி, இம்மாமன்றத்தில் சுற்றுலாத் துறையின் மானியக் கோரிக்கை மீதான எனது பதிலுரையை வழங்குகின்றேன்.

சுற்றுலா என்பது வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார துறையாகும். சுற்றுலாப் பயணிகளின் பணப் புழக்கம் காரணமாக உள்ளூர் மக்களின் பொருளாதாரம் பொலிவடையும். வேலைவாய்ப்புகளை பெருக்கி: வறுமையினை ஒழித்து; வருவாயை அதிகரித்து; அன்னிய செலவாணியை ஈட்டி; பொருளாதாரத்தை பேணிட; சுற்றுலா உதவுகிறது. ஐ.நா. சபையின் ஆய்வின்படி, பொருளாதாரம், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் என 3 அம்சங்களை சுற்றுலா பெற்றுள்ளது.

### சுற்றுலாத் தலமாக விளங்கும் தமிழ்நாடு!

சுற்றுலா என்ற சொல்லில் பல பிரிவுகள் உண்டு. தமிழ்நாட்டை ஆண்ட பண்டைய மன்னர்கள் பற்றிய கோட்டைகள், அரண்மனைகள், கோயில்கள், நினைவுத் தலங்கள் என சுற்றிப் பார்க்க வந்தால் அது பாரம்பரியம் மற்றும் ஆன்மீக சுற்றுலா.

சென்னை முதல் கன்னியாகுமரி வரை 1,076 கி.மீ. நீண்ட நெடிய கடற்கரை புவியமைப்பை கொண்டது தமிழ்நாடு. இயற்கை எழில் கொட்டி கிடக்கின்ற அப்பகுதிகளை சுற்றிப் பார்க்க வந்தால் அது கடற்கரை சுற்றுலா. மலையேற்றம், கடல் நீச்சல், நீர் விளையாட்டு, ரங்க ராட்டினம் என பயணப்பட்டால் அது சாகசச் சுற்றுலா.

இயற்கை வழங்கிய வனப்பு மிகு வனங்களும், மலை வாசஸ்தலங்களும், சரணாலயங்கள், தேசிய பூங்காக்களும் என சுற்றிப் பார்க்க வருவதே சுற்றுச்சூழல் மற்றும் வனச் சுற்றுலா.

வெளிநாட்டு நோயாளிகள் மருத்துவச் சிகிச்சைக்காக சிறப்பும், சிக்கனமும் கருதி தமிழ்நாட்டிற்கு வருகின்றனர். தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்துவதே மருத்துவச் சுற்றுலா.

உற்பத்திப் பொருட்களின் பரிவர்த்தனைகளின் பொருட்டு வணிகர்களின் அன்றாட பயணங்களே வணிகச் சுற்றுலா.

பரபரப்பான நகர மக்கள் நகர்ந்து சென்று மலைசார்ந்த கிராமச் சூழல்களிலும் பண்ணை இல்லங்களில் பொழுதை கழிப்பதும், கிராமிய மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் சுற்றுலா.

கேரவான்களில் பயணித்தபடி சுற்றுலாத் தலங்களில் சுகம் காணும் திட்டங்களே கேரவான் சுற்றுலா.

ஜல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு, ரேக்ளா ரேஸ், பொங்கல் திருவிழாக்கள், கிராம தேவதைகளுக்கான விழாக்கள் ஆகியவற்றை கண்டுகளிக்க வந்தால் அது பண்பாட்டுச் சுற்றுலா.

மண்ணுக்கேற்ற மணமும், மண்பானைச் சோறும் என பண்டைய தமிழர் உணவு பழக்கங்களில் திளைக்க விரும்பினால் அது உணவுச் சுற்றுலா.

பள்ளிப் பாடங்களில் பவனி வருகின்ற பல்வேறு நிலைப்பாடுகளை நேரில் பார்ப்பதற்காக மாணவர்களை அழைத்து சென்று சுற்றிக்காட்டுவது என்ற நிலை பாடத் திட்டங்களில் உண்டு. இதுவே கல்விச் சுற்றுலா.

### முதலிடத்தில் மாமல்லபுரம்

கலை கலாச்சாரம், இயற்கை எழில் சூழ்ந்த மலை, நீர், நிலப்பரப்புகள் கொண்டதாகவும் இருப்பதால், தமிழ்நாடு நாட்டிலேயே முதன்மை சுற்றுலா தலமாக விளங்குகிறது. தமிழ்நாடு மற்றும் நாட்டின் முக்கிய நகரங்களில் 38 சுற்றுலா அலுவலகங்கள், 22 சுற்றுலா தகவல் மையங்கள் உள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, சீனா, மலேசியா மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளின் பயணிகளே பெருமளவில் நம் நாட்டிற்கு வருகை புரிந்துள்ளனர். யுனெஸ்கோ உலக பாரம்பரிய தலமான மாமல்லபுர நினைவுச் சின்னங்கள் 1,44,984 வெளிநாட்டு சுற்றுலா பயணிகளால் பார்வையிடப்பட்டு, வருகையில் முதலிடம் வகிக்கின்றன.

தாஜ்மஹாலை 38,922 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பார்வையிட்டு, இரண்டாம் இடத்தில் உள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பார்வையிடும் 10 பிரபலமான பாரம்பரிய நினைவுச் சின்னங்களின் பட்டியலில், திருமயம் கோட்டை அருங்காட்சியகம்; வட்டக்கோட்டை; செஞ்சி கோட்டை; சித்தன்னவாசல் குடைவரை ஜெயின் கோயில்; சாலுவன்குப்பம் புலிக்குகை கோயில் உள்ளிட்ட நினைவுச் சின்னங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

2021 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 11 கோடியே 65 இலட்சத்து 66 ஆயிரம். இவற்றில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 12 இலட்சத்து 30 ஆயிரம். 2022 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 21 கோடியே 89 இலட்சத்து 11 ஆயிரம். இவற்றில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 4 இலட்சத்து 7 ஆயிரம். சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2022 ஆம் ஆண்டில் 10 கோடியே 23 இலட்சத்து 45 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் கூடுதலாக தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்துள்ளனர்.

### இலக்கை அடைய இந்திய நாட்டிய விழா!

தமிழ்நாடு மாநில திட்டக் குழு "2030க்குள் நிலையான சுற்றுலாவை மேம்படுத்துதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், உள்ளூர் கலாச்சாரம் மற்றும் தயாரிப்புகளை ஊக்குவிக்கும் கொள்கைகளை வகுத்து செயல்படுத்துதல்" என்ற இலக்கினை சுற்றுலாத் துறைக்கு நிர்ணயித்து ள்ளது. இந்த இலக்கினை எய்திட, உலகப் புகழ் பெற்ற "இந்திய நாட்டிய விழா" ஆண்டுதோறும் மாமல்லபுரத்தில் டிசம்பர் முதல் ஜனவரி வரை நடத்தப்படுகிறது. இந்திய நாட்டிய விழாவைக் காண ஆண்டுதோறும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மாமல்லபுரத்திற்கு வருகைபுரிகின்றனர். 50க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் மற்றும் பரதநாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழ்நாட்டின் முக்கிய கோடை வாசஸ்தலங்களான உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு, வால்பாறை, ஏலகிரி மற்றும் கொல்லிமலை ஆகிய பகுதிகளில் கோடை விழாக்கள் நடத்தப்படுகின்றன. சர்வதேச பயணச் சந்தைகளில் சுற்றுலாத் துறை பங்கேற்பதால், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தமிழ்நாட்டில் கணிசமாக உயர்ந்துள்ளது.

### விருதுகள்!

தமிழ்நாடு சுற்றுலாத் துறை 2022-2023 ஆம் ஆண்டில் பின்வரும் விருதுகளைப் பெற்றுள்ளது.

1.சிறந்த கடற்கரைகள் மற்றும் கடற்கரை தலத்திற்கான விருது, இந்தியா டுடே குழுமத்தால் கன்னியாகுமரி மாவட்டத்தின் Lemur கடற்கரைக்கு வழங்கப்பட்டுள்ளது.

2."ஆன்மீக சுற்றுலாவிற்கான சிறந்த மாநிலம்" என்ற விருது தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு Travel + Leisure India and South Asia 11வது பதிப்பில், கிடைத்துள்ளது. 3.SKOCH உச்சி மாநாட்டில் 2023ல் "வெள்ளி" விருது கிடைத்துள்ளது.

4.இந்தியாவில் பிரம்மிக்கவைக்கும் மலைக் காட்சிகளுக்கான சிறந்த இடத்திற்கான பிரிவில் நீலகிரி மாவட்டம், குன்னூருக்கு "வெள்ளி" விருதினை,புதுடெல்லியில் Outlook Traveller Awards2022 விழாவில் பெற்றது.

5. பசுமை சுற்றுலாத் தலங்களுக்கான விருதுக்காக 2022ல் கிரேக்கத்தின் Athensல், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டது. 6."இந்தியாவின் சிறந்த பாரம்பரிய தலத்திற்கான" விருது தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு ஜெர்மன் தலைநகர் Berlinல் Pacific Area Travel Writers Association (PATWA) வழங்கப்பட்டது.

7."இந்தியாவின் சிறந்த சுற்றுலா அமைச்சர் 2023" என்ற விருது தமிழ்நாடு அரசின் சுற்றுலாத் துறை அமைச்சர் ஆகிய எனக்கு Pacific Area Travel Writers Association ஆல் (PATWA) ஜெர்மன் தலைநகர் Berlinல் நடைபெற்ற சர்வதேச பயண விருதுகள் விழாவில் வழங்கப்பட்டது.

### உலகின் 15 மொழிகளில் தமிழ்நாடு சுற்றுலா!

தமிழ்நாடு சுற்றுலாத் துறையானது, TravelXP Television Global Channels மற்றும் TravelXP சமூக ஊடகங்கள்மூலம் தமிழ்நாட்டின் அழகையும் கலாச்சாரத்தையும் 15 மொழிகளில் உலகெங்கிலும் உள்ள பார்வையாளர்களுக்கு வழங்கியுள்ளது. தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் விளம்பர உத்திகள் 2022-2023 ஆம் ஆண்டில் மாநிலத்திற்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க உதவியது. சுற்றுலாத் துறையானது, 2021 ஆம் ஆண்டில் மாநிலத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள்/இடங்களைக் கண்டறிந்து மேம்படுத்த தமிழ்நாடு சுற்றுலாத் தல மேம்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி யுள்ளது.

இத் திட்டத்தின்கீழ், 2022-2023 ஆம் ஆண்டில், அணைக்கட்டுகள், நீர்த் தேக்கங்கள், பூண்டி அணைக்கட்டு, ஆண்டிபாளையம் ஏரிப் பகுதி, கொளவாய் ஏரிப் பகுதி, ஒகேனக்கல் அருவிப் பகுதி, முட்டம் கடற்கரை, திற்பரப்பு அருவி, பூம்பாறை, குற்றாலம், பிச்சாவரம், முத்துப்பேட்டை Mangrove காடுகள், முத்துக்குடா பகுதி, வத்தல்மலை ஆகிய சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த மொத்தமாக ரூ.97.0068 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

மதுரை, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு அரங்கம், சென்னை கிழக்கு கடற்கரை சாலையில் ஆன்மீக மற்றும் கலாச்சார சுற்றுச்சூழல் பூங்கா, இராமேஸ்வரம் மற்றும் கொடைக்கானல் helicopter இறங்குதளம் ஆகியவற்றிற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ரூ.46.9593 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர் அவர்கள் helicopter இறங்குதளம் அமைப்பது பற்றிக் கேட்டிருந்தார்கள். அதை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

தமிழ்நாட்டிற்கு வருகைபுரியும் சுற்றுலா பயணிகளுக்கு தரமான சேவைகளை வழங்குவதற்கு, "தமிழ்நாடு சுற்றுலா பயண ஏற்பாட்டாளர்கள், பயண முகவர்கள், சுற்றுலா பேருந்து இயக்குபவர்களுக்கான திட்டம் 2023" அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய சுற்றுலாக் கொள்கை தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்படும்.

### வெவ்வேறு பிரிவுகளில் 55 விருதுகள்!

உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு முதன்முதலாக தமிழ்நாடு சுற்றுலா விருதுகள் 2022ல் வழங்கப்பட்டன. இதில் சுற்றுலா செயல்பாட்டாளர்கள், விமானம் நிறுவனங்கள், விடுதிகள், உணவகங்கள், வழிகாட்டிகள் போன்ற பல்வேறு சுற்றுலா பங்களிப்பாளர்களை உள்ளடக்கிய 17 வெவ்வேறு பிரிவுகளில் 55 விருதுகள் வழங்கப்பட்டன.

ஆடம்பர வசதிகளுடன்கூடிய Cordelia Cruises என்ற சொகுசு கப்பல் சேவை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சென்னை துறைமுகத்திலிருந்து துவக்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வு தமிழ்நாடு சுற்றுலாத் துறைக்கு ஒரு முக்கிய மைல் கல்லாக அமைகிறது.

பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அய்யா அவர்களால் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 361971 அன்று நிறுவப்பட்டது. சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான தங்குமிட வசதிகள், பல்வேறு தொகுப்பு சுற்றுலாக்கள், படகு குழாம்கள், பொருட்காட்சி மற்றும் திருவிழாக்கள் போன்றவை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முக்கிய செயல்பாடுகளாகும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தற்போது 28 ஓட்டல்களை நேரடியாக நிர்வகித்து வருகிறது. ஓட்டல் தமிழ்நாடு திறந்தவெளி உணவகம் தீவுத்திடல், கடற்கரை ஓய்வு வளாகம் மாமல்லபுரம், ஓட்டல் தமிழ்நாடு மதுரை2, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திருச்சி, ராணிப்பேட்டை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு 2022-2023 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட்டு தரமுயர்த்தப்பட்டுள்ளன.

### சாகச சவாரி நீர் விளையாட்டுகள்!

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக உணவகங்களில் உணவு விற்பனையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படியே "அமுதகம்" என்ற பெயரில் வணிக பெயர் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது 35 உணவகங்கள் "அமுதகம்" என்ற பெயரில் இயங்கி வருகின்றன.

வண்டலூர், கோவளம், ஏற்காடு மற்றும் வாலாங்குளம் ஏரி ஆகிய சுற்றுலாத் தலங்களில் "குயிக் பைட்ஸ்" என்ற வணிக பெயரில் துரித உணவகங்கள்மூலம் மார்ச் 2023 வரை ரூ.56.59 இலட்சம் வருவாய் ஈட்டியுள்ளன.

ஆலயம் என்ற பெயரில் இராமேஸ்வரம், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய பக்தர்கள் தங்கும் மூன்று விடுதிகளை 50:50 என்ற இலாப பகிர்வு அடிப்படையில் இந்து சமய அறநிலையங்கள் துறையுடன் இணைந்து நடத்தி வருகின்றது. 2022-2023 ஆம் ஆண்டில் ஆலயம் விடுதிகள்மூலம் ரூ.291.54 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் முட்டுக்காடு, முதலியார்குப்பம், உதகமண்டலம், பைகாரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம், வாலாங்குளம் ஆகிய 9 இடங்களிலும் சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன்கூடிய படகு குழாம் இயக்கப்பட்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டில், முட்டுக்காடு படகு குழாம்மூலம் ரூ.485.82 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. முதலியார்குப்பம் படகு குழாம்மூலம் ரூ.117.20 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. உதகமண்டலம் படகு குழாம் மூலம் ரூ.1375.95 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பைக்காரா படகு குழாம் மூலம் ரூ.390.00 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. கொடைக்கானல் படகு குழாம்மூலம் ரூ.452.98 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. ஏற்காடு படகு குழாம்மூலம் ரூ.364.17 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. பிச்சாவரம் படகு குழாம்மூலம் ரூ.466.87 லட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு புதிய படகு இல்லம் நமது முதலமைச்சர் அவர்களால் 24.08.2022 அன்று கோயம்புத்தூர் வாலாங்குளம் ஏரியில் திறக்கப்பட்டது. 2022-2023 ஆண்டு இதன்மூலம் ரூ.29.85 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

தொட்டபெட்டா, கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய மலை வாசஸ்தலங்களிலும் தொலை நோக்கி இல்லங்கள் இயங்கி வருகின்றன. 2022 2023 ஆம் ஆண்டு இவைமூலம் ரூ.299.55 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### நீலக்கொடி சான்றிதழ்!

டென்மார்க் சுற்றுசூழல் கல்விக்கான அறக்கட்டளையின்மூலம், நீலக்கொடி சான்றிதழ் பெற்ற கோவளம் கடற்கரை தமிழ்நாட்டின் முதல் மற்றும் இந்தியாவில் 9 ஆவது நீலக்கொடி கடற்கரை என்ற பெருமையைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் நீலக்கொடி கடற்கரையின் பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளை நிர்வகிக்கும் பொறுப்பை மேற்கொண்டு வருகிறது.

2022-2023 ஆம் ஆண்டு கோவளம் நீலக்கொடி கடற்கரைமூலம் ரூ.178.98 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சொந்தமாக 14 சொகுசுப் பேருந்துகளை இயக்கி வருகிறது. இவற்றின் எண்ணிக்கையை மேலும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒருநாள் திருப்பதி சுற்றுலா, 3 நாட்கள் நவக்கிரக சுற்றுலா, 8 நாட்கள் தமிழ்நாடு சுற்றுலா மற்றும் 8 நாட்கள் கிழக்குமேற்கு கடற்கரைச் சுற்றுலா ஆகியவை மிகவும் புகழ்பெற்றவை.

பொதுமக்களின் அமோக வரவேற்பினை பெற்ற சென்னைதிருப்பதி ஒருநாள் தினசரி சுற்றுலாவை இணையவழி முன்பதிவுமூலம் பதிவு செய்து, திருமலை திருப்பதி தேவஸ்தான கணினியுடன் இணைக்கப்பட்டு, விரைவாக தரிசனம் முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது.

தற்போது தினசரி 1,000 விரைவு தரிசன சீட்டுகளைப் பெற்று சென்னை, திருச்சி, கோவை, மதுரை, சேலம், ஓசூர் மற்றும் கடலூரில் இருந்து தினசரி இச்சுற்றுலாவை இயங்கி வருகிறது.

### சிறப்பு தரிசனத்திற்கு உடனடி அனுமதி!

இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 33 திருக்கோயில்களிலும் உடனடி சிறப்பு தரிசனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2022-2023 ஆம் ஆண்டில் ஆடி மாதம் அம்மன் மற்றும் புரட்டாசி மாதம் பெருமாள் சிறப்பு தரிசன சுற்றுலா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சென்னையில் தேவாலய சுற்றுலா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் ஜைன சமய தொடர்புடைய இடங்கள் அதிகம் உள்ளன. இவற்றை பிரபலப்படுத்தி, சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் முட்டுக்காடு படகு இல்லத்தில் மிதக்கும் உணவகம், உதகை படகு இல்லத்தில் சாகச விளையாட்டுகள், மாமல்லபுரம் மரகதப் பூங்காவில் 'ஒளிரும் பூங்கா' ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஊட்டி, கொடைக்கானல், வால்பாறை ஆகிய சுற்றுலாத் தலங்களில் கம்பி வட ஊர்தி நிறுவுவதற்கு, சென்னையில் 'எங்கும் ஏறலாம், எங்கும் இறங்கலாம்' என்ற பேருந்து வசதியினை அறிமுகப்படுத்துவதற்கும், தமிழ்நாட்டிலுள்ள ஐந்து திருக்கோவில்களை laser ஒளிக்கற்றை மூலம் மிளிரும் வகையில் அமைப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு ஆய்வுகள் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட உள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சென்னை தீவுத்திடலில் 1974 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் டிசம்பர் முதல் மார்ச் வரை 70 நாட்களுக்கு இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்தி வருகிறது. அந்தக் காலகட்டத்தில் முதலமைச்சர் பொறுப்பில் இருந்தவாறு இத்திட்டத்தை வடிவமைத்து வழங்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு 47வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி ஜனவரி மாதம் 4 ஆம் தேதி தொடங்கி மார்ச் 23 ஆம் தேதி வரை 'சுற்றுலா மறுசிந்தனை' என்ற கருப்பொருளை மையமாக வைத்து வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளது.

### பொருட்காட்சியில் 15 லட்சம் பார்வையாளர்கள்

பொருட்காட்சியில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை உள்பட 51 அரசுத் துறைகளின் அரங்குகள் இடம் பெற்றிருந்தன. இதன்மூலம் பல்வேறு அரசின் திட்டங்களைப் பற்றி பொதுமக்கள் பார்த்து தெரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்திருந்தது. இந்தாண்டு பொருட்காட்சியை சுமார் 15 இலட்சம் பார்வையாளர்கள் கண்டுகளித்துள்ளனர்.

தமிழ்நாட்டின் கலை, கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை உலகுக்கு தெரியப்படுத்தும்விதமாக, கலை பண்பாட்டுத் துறையுடன் இணைந்து, "நம்ம ஊரு திருவிழா" எனும் வருடாந்திர கலை விழா சென்னையில் நடத்தப்பட்டது. இந்த திருவிழாவில் 40க்கும் மேற்பட்ட நாட்டுப்புறக் கலைகள் மற்றும் கலை வடிவங்களில் 500க்கும் மேற்பட்ட கலைஞர்கள் கலை நிகழ்ச்சிகளை வழங்கினார்கள். இந்த நிகழ்வு சென்னையில் தீவுத்திடல் உள்பட 18 இடங்களில் நடைபெற்றது. இந்த விழாவில் பார்வையாளர்கள் நமது தமிழ்நாட்டின் பாரம்பரிய உணவு வகைகளை உண்டு மகிழும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உணவு அரங்குகள் அமைத்து சிறப்பாக நடத்தியது.

Hotels மற்றும் சுற்றுலாக்களை இணைய வழி உடன்நிகழ் முன்பதிவு (Online Real Time Reservation) செய்வதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், Channel Managerஐ நியமித்து பிரபலமான ஆன்லைன் பயண திரட்டிகள் (OTAs) இணைய தளங்களான Makemytrip, Goibibo, Booking.com மற்றும் இதர OTAக்களில் தமிழ்நாடு ஓட்டல்களின் அறைகளை முன்பதிவு செய்ய வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்மூலம் 5,096 முன்பதிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளதோடு, ஏப்ரல் 2022 முதல் பிப்ரவரி 2023 வரையிலான காலக்கட்டத்தில் ரூபாய் ஒரு கோடியே 85 இலட்சம் வருவாயையும் ஈட்டியுள்ளது.

அனைத்து ஓட்டல்களிலும், QR குறியீடுகளை பயன்படுத்தி பின்னூட்ட செயல்முறை (Feedback mechanism) அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழ்நாட்டைப் பற்றிய பயணம் மற்றும் சுற்றுலாத் தொடர்பான தகவல்களை தொலைபேசி (1800 4253 1111) மூலம் 24 மணி நேரமும் வழங்குவதற்காக பிரத்யேகமான அடிப்படையில் சுற்றுலா தகவல் உதவி (Helpline) சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

தீவுத்திடலில் உள்ள டிரைவ்இன் உணவகமானது ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் டிரைவ்இன் திரையரங்கம், பார்பிக்யூ நிலையம் மற்றும் தேநீர் விடுதி போன்ற பல்வேறு வசதிகளுடன் புது ப்பிக்கப்பட்டு 4.1.2023 அன்று முதல் பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வணிகங்களை அதிகப்படுத்தும் வகையில் வணிகத்துடன் வணிகம் என்ற புதிய திட்டம் 2022 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களின் வருவாயை உயர்த்த வெளி மாநிலங்களை சேர்ந்த முன்னணி பயண ஏற்பாட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளன.

### 38 மாவட்டங்களில் 597 சுற்றுலா தலங்கள்!

தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் சுமார் 597க்கும் மேற்பட்ட சுற்றுலாத் தலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இத்தகைய சுற்றுலாத் தலங்களை எதிர்காலத்தில் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று நிதி ஆதாரத்தைப் பெற்று மேம்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திராவிடக் கோட்பாட்டின் செயல்பாடுகளைத் தொகுத்து, 'திராவிட மாடல்' என புதிய விடியலை வழங்கி மகிழும் தானைத் தளபதியின் வாக்குகளும், வழிகாட